**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.856/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கந்தசாமி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **கணபதி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(10.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லியில் குடியிருந்து வருகிறேன். நான் JCB ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 09.06.2019ம் தேதி நானும் அய்யப்பனும் கள்ளிக்குடியில் உள்ள பானு ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில் அய்யப்பன் வண்டியை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்த போது கள்ளிக்குடி கிராஸிங் ரோட்டில் டவேரா கார் அதிவேகமாக வந்து எங்களது இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் அய்யப்பனுக்கு தலை, கால், குதிங்கால் ஆகிய இடங்களில் பலத்த இரத்தக் காயம் ஏற்பட்டது. எனக்கு அதிகமான காயங்கள் எதுவும் இல்லை. சம்பவயிடத்தில் கலாநிதியும், அருண்குமாரும் இருந்தார்கள். இருவரும் பைக்கை தூக்கிவிட்டு அய்யப்பனை திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு முதல் உதவி சிகிச்சை அளித்துவிட்டு அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் சம்பவயிடத்திலேயே இருந்தேன். என்னை போலிசார்

விசாரணை செய்தார்கள். டவேரா காரை ஆனந்த் என்பவர் ஓட்டி வந்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்ததாக சொல்லும் இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்திருந்தேன் என்றால் சரிதான். எந்த திசையிலிருந்து நாங்கள் சென்றோம் என்றால் எனக்கு திசை ஞாபகம் இல்லை. விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் எதிரியின் பெயர் ஆனந்த் என்று போலிசார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு எவ்வித காயமும் இல்லை. நான் பின்னால் அமர்ந்து இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த போதும் எனக்கு எவ்வித காயமும் இல்லை என்றால் சரிதான். வாகன விபத்தில் எனக்கு எவ்வித காயமும் ஏன் இல்லை என்றால் கார் மோதியதில் நான் திருநெல்வேலி ரோட்டில் பின்புறமாக விழுந்துவிட்டேன் அதனால் காயம் இல்லை. மதுரை ரோட்டில் எதிரியின் கார் வந்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் வண்டியை பார்த்து தான் ஓட்டினரா என்றால் பார்த்து தான் ஓட்டினார். இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் கவனக்குறைவால் ரோட்டைக் கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.856/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கலாநிதி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ரவிசந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(10.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது குராயூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 09.06.2019ம் தேதி நானும் அருண்குமாரும் கள்ளிக்குடி SBI ஏடி.எம். அருகே இரவு 8.15 மணியளவில் நின்று கொண்டிருந்த போது விருதுநகரிலிருந்து திருமங்கலம் நோக்கி ஒரு டவேரா கார் வேகமாக வந்தது. இருசக்கர வாகனத்தில் இருவர் கிழக்கிலிருந்து வந்து வடக்கு நோக்கி திரும்ப நின்று கொண்டிருந்த போது வேகமாக வந்த டவேரா கார் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. நாங்கள் ஓடி போய் பார்த்தோம். அதில் ஒருவரான அய்யப்பனுக்கு தலையில் பலத்த இரத்தக்காயமும் மொலிங்கால், கணுக்கால்களில் இரத்தக்காயங்கள் ஏற்பட்டிருந்தது. எனது இருசக்கர வாகனத்தில் அவரை ஏற்றி திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு முதல் உதவி செய்துவிட்டு ஆம்புலன்சு மூலம் மதுரை மீனாட்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்பு அவரது அப்பாவிற்கு தொலைபேசி மூலம் சம்பவத்தை பற்றி

கூறினோம். ஆஜர் எதிரி தான் சம்பவ தினத்தன்று டவேரா காரை ஓட்டி வந்த நபர் ஆவார். இருசக்கர வாகனத்தில் வந்த கந்தசாமிக்கு எவ்வித காயங்களும் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

SBI ஏடி.எம் செண்டர் ரோட்டிற்கு எந்த பக்கம் உள்ளது என்று சொன்னால் ரோட்டிலிருந்து சர்வீஸ் ரோடு அதன் பிறகு கிழக்கு பக்கம் உள்ளது. SBI ஏடி.எம் செண்டரிலிருந்து விபத்து நடந்தயிடமானது, முதலில் சர்வீஸ் அதன் பிறகு திருமங்கலம் டு விருதுநகர், அதன் பிறகு உள்ள விருதுநகர் டு திருமங்கலம் பைபாஸ் ரோட்டில் தான் விபத்து என்றால் சரிதான். ஏடி.எம் செண்டரில் நான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து விபத்து நடந்தயிடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 மீ தான் இருக்கும். SBI ஏடி.எம் செண்டர் பக்கத்தில் என்ன கடைகள் உள்ளது என்றால் ஒரு பால் கடை, ஒரு டீ கடை மற்றும் ஒரு காம்ப்ளக்ஸ் கடை உள்ளது. விபத்து நடந்தயிடத்தில் இருபுறமும் ஆட்கள் நிறைய இருக்கும் இடம் என்றால் சரிதான். ஆனால் இரவு 8 மணிக்கு மேல் ஆட்கள் குறைவாக இருப்பார்கள். விபத்து நடந்தவுடன் மேற்கு புறமாக இருந்த நபர்கள் விபத்து நடந்தயிடத்திற்கு சத்தம் கேட்டு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நாங்களும் வந்துவிட்டோம். இருசக்கர வாகனத்தில் இருசக்கர வாகனமானது எந்ததிசையில் இருந்து வந்தது என்று விபத்திற்கு முன் நான் பார்க்கவில்லை என்று சொன்னால் எங்களை பார்த்துவிட்டு தான் அவர்கள் சென்றார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் அருகில் விபத்துக்குள்ளானவர்கள் சாப்பிட்ட பானு ஓட்டல் ரோட்டில் எந்த திசையில் உள்ளது என்றால் SBI ஏடி.எம் செண்டரிலிருந்து தெற்கே உள்ளது. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.856/2022**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கண்ணன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பாலகிருஷ்ணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(10.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது ஆவல்சூரன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 09.06.2019ம் தேதி இரவு 11 மணிக்கு நான் மதுரையில் இருந்து கள்ளிக்குடிக்கு பேருந்தில் இறங்கினேன். அன்று நடந்த விபத்து தொடர்பாக கள்ளிக்குடி காவல் நிலையத்திலிருந்து போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள். நான் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தேன். **அந்த பார்வை மகசர் அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பார்வை மகசரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். போலிசார் எனக்கு விபரம் சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் SBI ஏடி.எம் இருதிசையில் இல்லை என்று

சொன்னால் சரிதான். பார்வை மகசரில் சம்பவம் நடந்தயிடத்திற்கு கிழக்கோ மேற்கிலோ SBI ஏடி.எம் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் பானு ஓட்டல் இல்லை என்றால் சரிதான். ஆனால் உண்மையில் இருந்தது. என்னிடம் கையெழுத்து வாங்கும் போது சார்பு ஆய்வாளர் மேற்படி SBI ஏடி.எம் சம்பந்தமாக பானு ஓட்டல் சம்பந்தமாகவோ ஏன் குறிப்பிட்டு காண்பிக்கபடவில்லை என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை